<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 03/2009

Deposition of Witness : DW 1

Name : வள்ளியம்மாள் (வயது – 77)

Father's Name /W/o : க/பெ வரதன்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : கணபதிபுரம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 13.08.2025.

## <u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. 13.09.1971 தேதியில் 33 செண்ட், 17.06.1975 தேதியில் 1.28 செண்ட் நடராஜபிள்ளை மற்றும் அருணாசலப்பிள்ளை அவர் வாரிசுகள் எனக்கு கிரையம் கொடுத்தது மூலம் தான் வழக்கு சொத்து எனக்கு பாத்தியமானது என்றால் சரிதான். மேற்படி 2 பத்திரம் தவிர்த்து வேறு எந்த பத்திரம் மூலம் நடராஜபிள்ளை மற்றும் அருணாசலப்பிள்ளை அவர் வாரிசுகளிடமிருந்து சொத்து வாங்கவில்லை என்றால் சரிதான். நான் வழக்கை சொத்தை வாங்கியதற்கு ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை.

2. நடராஜபிள்ளை மற்றும் அருணாசலப்பிள்ளைக்கு 2 ஏக்கர் 45 செண்ட் உரிமை இருந்தது என்றால் சரிதான். மேற்படி சொத்தில் தான் நான் 1 ஏக்கர் 61 செண்ட் வாங்கினேன் என்றால் சரிதான். எனக்கு விற்றது போக மீதி உள்ள செண்டை நடராஜபிள்ளை மற்றும் அருணாசலப்பிள்ளை அனுபவித்தார்களா என்றல் தெரியாது.

3. நான் வாங்கிய சொத்திற்கு பட்டா, சிட்டா, அடங்கல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி பட்டா, சிட்டா, அடங்கல் பார்த்தால் எவ்வளவு விஸ்தீரணம் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். எனக்கு விற்றது போக மீதமுள்ள சொத்தில் நடராஜபிள்ளை மற்றும் அருணாசலப்பிள்ளை வாரிசுகள் வாதிதான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை. நடராஜபிள்ளை 1974 ஆண்டில் சர்வே எண்.116/1 இல் 30 செண்ட் நிலத்தை ராமசாமி என்பவருக்கு வாச்சாவாக கிரையம் கொடுத்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. ராமசாமி துளசிநாயக்கருக்கு 1976 ஆண்டில் வாச்சாவாக கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.116/1 இல் 30 செண்ட் நிலம் தற்போது யாரிடம் உள்ளது, யார் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தற்போத என் அனுபவத்தில் தான் உள்ளது. என் அனுபவத்தில் உள்ளது என்பதை காட்டவோ அல்லது நான் வாச்சாவாக துளசிநாயகரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்பதை காட்ட ஏதேனும் ஆவணம் இந்நீதிமன்றத்தல் தாக்கல் செய்தள்ளேனா என்றால் இல்லை சாட்சி தானாக முன்வந்து எனக்கு தெரியவில்லை என்று தெரிவித்தார்.

5. நான் இந்நீதிமன்றத்தில் எந்த ஆவணம் தாக்கல் செய்யாமல் எனக்கு தெரியவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த காலத்திலும் மேற்கண்ட 30 செண்டை கிரையம் பெறவில்லை என்றாலும் அதில் அனுபவத்திலும் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் சிட்டா படி அருணாச்சலம் பெயரில் உள்ளதா என்றால் எனக்கு படிக்க தெரியாது. மேற்படி சொத்து அருணாச்சலம் பெயரில் தான் உள்ளது என்றாலும் தெரிந்தும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நடராஜபிள்ளை எனக்கு வாச்சாவாக கொடுத்தார் என்று நான் தெரிவித்தள்ளேன் என்றாலும் எப்போது வாச்சாவாக கொடுத்தார் எனக்கு ஞாபகமில்லை.

6. எனக்கு வாச்சாவாக கிரையம் கொடுக்கவில்லை என்றாலும் எழுதி தான் கொடுத்தார் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்தை தான் 50 ஆண்டுகளாக அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்திற்கு தான் வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரிதான்.மேற்படி 1971 மற்றும் 1975 ஆண்டுகளில் நான் கிரையம் பெற்ற பத்திரங்களின் மூலம் தான் சொத்தில் உரிமை பெருகிறேன் என்றால் சரிதான். அதைத் தவிர்த்து வேறு சொத்துக்கு உரிமை இல்லை என்றால் சரிதான்.

7. என் முதன்மை வாக்கு மூலத்தில் தாவா சொத்து எதிரிடை உரிமை அனுபவ பாத்தியம் (ADVERSE POSSESSION) மூலம் உரிமை பெறுகிறேன் என்று தெரிவித்துள்ளேன் என்றாலும் என் பதிலுரையில் நான் மேற்படி விபரத்தை தெரிவிக்கவில்லை என்றாலும் சரிதான். இந்த வழக்கு 2009 ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் பாபு, ஏழுமலை, தேவராஜ் ஆகியோருக்கு 2013 ஆண்டில் செட்டில் மெண்ட எழுதி கொடுத்த விபரம் தற்போது தான் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் இதற்கு முன்பு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி செட்டில் மெண்ட் ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. நான் வாங்கிய சொத்தில் நான் அனுபவித்து வருகிறேனா அல்லது என் மகன்கள் அனுபவித்து வருகிறார்களா என்றால் என் மகன்கள் அனுபவித்து வருகிறார்கள். வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் நான் தவறாக வழக்கு நடத்துகிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் கோரியபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. தற்போது நான் சாட்சியம் அளிக்கும்போது என்னுடன் வந்துள்ளது யார் என்றால் என் மகன் ஏழுமலை.